Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 127 | உள்ளூர் - 07.05.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 127 | வெளியூர் - 08.05.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**கேரளத்தில் அடுத்த முதல்-மந்திரி யார்?**

**தொழில் முன்னேற்றம் காண வாஸ்து குறிப்புகள்!**

**ஜோசப் விஜய் ஆட்சி அமைப்பதில் சிக்கல்?**

**தமிழகத்திற்கு உளவுத்துறை எச்சரிக்கை!**

# சிந்தூர் நடவடிக்கை ஓராண்டு நிறைவு: சமூக வலைதளத்தில் முகப்பு பக்கத்தை மாற்றிய பிரதமர் மோடி!




புதுடெல்லி, மே. 07–
கடந்தாண்டு ஏப்ரல் 22ம் தேதி ஜம்மு–காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுற்றுலா பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த கொடூரத்திற்கு எதிராக ஆபரேஷன் சிந்தூர் என்ற அதிரடி நடவடிக்கையை மே 7ம் தேதி இந்தியா மேற்கொண்டது.

இதில், பாகிஸ்தானின் 9 பயங்கரவாத முகாம்களை இந்திய விமானப்படை துல்லியமாக தாக்கி அழித்தது. 100–க்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்நிலையில் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தொடங்கி இன்றுடன் ஓராண்டு நிறைவடைந்துள்ளது.

இதனை நினைவுகூறும் வகையில் பிரதமர் மோடி தனது சமூக ஊடக பக்கங்களில் உள்ள முகப்பு பக்கத்தை மாற்றி உள்ளார்.

அந்தப் படத்தில் மூவர்ணக் கொடி உள்ளது, மேலும் ‘சிந்தூர்‘ என்ற வார்த்தையின் ‘ஒ’ எழுத்தில் ஒன்று, திருமணமான இந்துப் பெண்களின் சின்னமான குங்குமத்தால் நிரப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக பிரதமர் மோடி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது:– ஓராண்டுக்கு முன்பு, # ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது, நமது பாதுகாப்பு படைகள் தங்கள் வீரத்தை வெளிப்படுத்தி, நம் மக்களைத் தாக்கியவர்களுக்குக் கடுமையான பதிலடி கொடுத்தன. ஒவ்வொரு இந்தியரும் நமது பாதுகாப்பு படைகளைக் குறித்துப் பெருமை கொள்கிறார்கள். நமது படைகளுக்கும், # ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது அவர்கள் அடைந்த வெற்றிக்கும் மரியாதை செலுத்தும் விதமாக, நாம் அனைவரும் எக்ஸ், பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் உள்ளிட்ட சமூக ஊடகங்களில் நமது டிஸ்ப்ளே முகப்பு படங்களை, கீழே பகிரப்பட்டுள்ள படத்திற்கு மாற்றுவோம் என அதில் பதிவிட்டுள்ளார்.

# ஈரானுடன் விரைவில் ஒப்பந்தம் - டிரம்ப் நம்பிக்கை!



வாஷிங்டன், மே. 07–
ஈரான் மீது இஸ்ரேலுடன் இணைந்து கடந்த பிப்ரவரி மாத இறுதியில் அமெரிக்கா போர் தாக்குதலை தொடங்கிய ஈரான் ராணுவம், வளைகுடா பகுதியில் உள்ள அண்டை நாடுகளான சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், ஓமன், கத்தார் உள்ளிட்ட நாடுகளில் உள்ள விமான நிலையங்கள் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தியது.

சுமார் ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்த கடுமையான போர் தாக்குதல் காரணமாக உலகளவில் கடும் எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டது. இதற்கிடையே போரை நிறுத்த ஈரான் உடனான அமெரிக்காவின் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதனை தொடர்ந்து உலக நாடுகளின் அழுத்தம் காரணமாக போரை காலவரையின்றி நிறுத்துவதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவித்தார்.

வாஷிங்டனில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் ஈரான் உடனான போரை 3 வாரத்துக்குள் முழுவதுமாக முடிக்க உள்ளதாக டிரம்ப் பேட்டியளித்தார். இதனிடையே அமெரிக்க உள்துறை மந்திரி மார்க் ரூபியோ, ஈரானில் வேண்டிய இலக்குகளை அடைந்துவிட்டோம் எனவும் போர் நிரந்தரமாக முடிக்கப்படும் என தெரிவித்தார். இதற்கிடைய டிரம்ப் 2 நாள் பயணமாக சீனாவுக்கு செல்ல இருக்கிறார். வருகிற 14 மற்றும் 15–ந்தேதி பீஜிங்கில் வைத்து அந்த நாட்டின் அதிபர் ஜின் பிங்கை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இந்தநிலையில், போரை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்கா முன்வைத்த புதிய திட்டத்தைத் தீவிரமாக பரிசீலித்து வருவதாக ஈரான் தெரிவித்துள்ளது. ஈரான் மற்றும் அமெரிக்கா இடையே மோதல்களை முடிவுக்கு கொண்டுவர புதிய அமைதி ஒப்பந்தம் பரிசீலனை செய்து வருவதாகவும் கடந்த 24 மணிநேரத்தில் பேச்சு வார்த்தை முன்னேற்றம் அடைந்துள்ளதாக ஜனாதிபதிடிரம்ப்தெரிவித்துள்ளார். விரைவில் உடன்பாடு ஏற்படுவது மிகவும் சாத்தியம் என்று நம்புவதாக டிரம்ப் கருத்து தெரிவித்துள்ளார். பொருளாதாரத் தடைகளை நீக்கவும், அணுசக்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுவருவதாக கூறப்படுகிறது. முதற்கட்டமாக ஒரு பக்க அளவிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் எட்டுவதில் இரு தரப்பும் இறுதிக்கட்டத்தை நெருங்கியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# முதல்-அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார் ரங்கசாமி!



புதுச்சேரி, மே 07–
புதுச்சேரி முதல்–அமைச்சர் ரங்கசாமி நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தட்டாஞ்சாவடி மற்றும் மங்கலம் தொகுதிகளில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இந்த 2 தொகுதிகளில் ஒரு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். அதன் பின்னர் அந்த தொகுதி எம்.எல்.ஏ.வை தேர்வு செய்ய இடைத்தேர்தல் நடைபெறுவது வழக்கம்.

முதல்–அமைச்சர் ரங்கசாமி, தட்டாஞ்சாவடி தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்ய திட்டமிட்டுள்ளார். அவர் முதல்–அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் தனது ராஜினாமா கடிதத்தை அளிக்க இருக்கிறார். இதையடுத்து அந்த தொகுதி காலியாக உள்ளதாக தேர்தல் கமிஷனுக்கு தெரிவிக்கப்படும். 6 மாதங்களில் இடைத்தேர்தல் நடக்கும். முதல்–அமைச்சர் ரங்க சாமி தட்டாஞ்சாவடி தொகுதி யில் தேர்தல் பிரசாரத்தை தொடங்கியபோது, வாக்காளர்கள் மத்தியில் பேசுகையில், தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று நான் தான் மீண்டும் முதல்–அமைச்சராக வருவேன். தட்டாஞ்சாவடி தொகுதியில் அசோக் ஆனந்த் போட்டியிடுவார் என்று தெரிவித்திருந்தார்.

எனவே தட்டாஞ்சாவடி தொகுதியில் முன்னாள் எம்.எல்.ஏ. அசோக் ஆனந்த் போட்டியிடுவார் என தெரிகிறது. இந்நிலையில் புதுச்சேரி கவர்னர் கைலாசநாதனை சந்தித்து முதல்–அமைச்சர் பதவியை ரங்கசாமி இன்று (07.05.2026) ராஜினாமா செய்தார். இதனிடையே சட்டமன்ற தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்கு தார்மீக பொறுப்பேற்று காங்கிரஸ் கட்சி புதுச்சேரி தலைவர் பதவியை வைத்திலிங்கம் ராஜினாமா செய்தார். தட்டாஞ்சாவடி தொகுதியில் ரங்கசாமியை எதிர்த்து போட்டியிட்ட அவர் டெபாசிட் இழந்திருந்தார்.

## குறைவான எம்.எல். ஏக்கள் – நிலையான அரசு?

# அடுக்கடுக்கான கேள்விகள்? விளக்கத்தில் திருப்தியில்லை!

## ஆட்சி அமைப்பதில் தொடரும் சிக்கல்...!!



சென்னை, மே. 07–
பெரும்பான்மையை எப்படி நிரூபிப்பீர்கள் என்ற கேள்விக்கு விஜய் அளித்த விளக்கத்தில் கவர்னருக்கு திருப்தியில்லை. இதனால், தவெக ஆட்சி அமைப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

கவர்னர் அர்லேக்கரை சந்தித்து, தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், ஆட்சி அமைக்க அழைக்குமாறு கடிதம் கொடுத்து இருந்தார். போதுமான எண்ணிக்கையில் எம்.எல்.ஏ.,க்கள் ஆதரவை பெற்று வருமாறு கவர்னர் அறிவுறுத்தியதை அடுத்து, தமிழக அரசியல் களம் சூடு பிடித்தது. இந்நிலையில் விஜய்க்கு அளிக்கப்பட்ட பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டது. பதவியேற்பு விழா ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டது. அதிமுக எம்எல்ஏக்கள் புதுச்சேரி ரிசார்ட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சூழலில், ஆட்சி அமைப்பது தொடர்பாக அரசியல் கட்சி தலைவர்களை சந்திக்க கவர்னர் அழைப்பு விடுத்து இருந்தார். அழைப்பின் பேரில், இன்று காலை 11 மணிக்கு கவர்னர் மாளிகைக்கு தவெக தலைவர் விஜய் வந்தார். விஜய் இடம் கவர்னர் ஆட்சி அமைப்பது தொடர்பாக சில விளக்கங்களை கேட்டு உள்ளார்.

**கவர்னர் திட்டவட்டம்**

‘‘113 எம்எல்ஏக்களை வைத்து எப்படி ஆட்சி அமைப்பீர்கள்? வேறு எந்த கட்சி தவெக அரசை ஆதரிக்கும்? பதவி ஏற்ற பிறகு பெரும்பான்மையை நிரூபிக்க முடியும் என்று எப்படி நம்புகிறீர்கள்? உங்களிடம் இருக்கும் எம்எல்ஏக்களை வைத்து நிலையான அரசை அமைக்க முடியுமா?

118 எம்எல்ஏக்கள் ஆதரவை இருப்பதை காட்டுங்கள், அவ்வாறு நிரூபித்தால் மட்டுமே பதவி பிரமாணம் செய்து வைக்க முடியும். பெரும்பான்மை கிடைத்துவிடும் எனும் யூகத்தின் அடிப்படையில் செயல்பட முடியுமா?’ என்று விஜயிடம் தமிழக கவர்னர் அர்லேக்கர் கேள்விகளை எழுப்பினார். அப்போது அவரிடம், விதிமுறைகளின்படி தன்னை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டும் என்று விஜய் மீண்டும் வலியுறுத்தினார். விஜய் கவர்னரை சந்திப்பது, 24 மணி நேரத்தில் இது இரண்டாம் முறை.

பெரும்பான்மையை எப்படி நிரூபிப்பீர்கள் என்ற கவர்னரின் கேள்விகளுக்கு விஜய் நேரடியாக பதில் அளிக்க முடியவில்லை. அவர் அளித்த விளக்கத்தில் கவர்னருக்கு திருப்தி இல்லை. இதனால், ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பது, பதவிப்பிரமாணம் செய்து வைப்பது பற்றி கவர்னர் எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. இதனால் தவெக ஆட்சி அமைப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

**இபிஎஸ்க்கும் அழைப்பு**


கவர்னர் அர்லேக்கர் அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ்சுக்கும் நேரில் சந்திக்க வருமாறு அழைப்பு விடுத்து இருக்கிறார். அதன்படி கவர்னரை சந்தித்து இபிஎஸ் பேச உள்ளார். அடுத்தபடியாக, காபந்து முதல்வர் ஸ்டாலினுக்கும் கவர்னர் அழைப்பு விடுத்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் கூட்டணிக் கட்சி தலைவர்கள் சந்திப்பு!!



திமுக தலைவர் மு.க.ஸ்டாலினுடன் கூட்டணிக் கட்சி தலைவர்கள் சந்தித்தனர். மு.க.ஸ்டாலினுடன் வி.சி.க. தலைவர் திருமாவளவன், மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் சண்முகம், இந்திய கம்யூ. மாநிலச் செயலாளர் வீரபாண்டியனும் சந்தித்தனர். ஆழ்வார்பேட்டை இல்லத்தில் கூட்டணி கட்சித் தலைவர்களுடன் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தி வருகிறார்.

## மே.வ. தேர்தல்: உச்ச நீதிமன்றத்தை நாடும் திரிணாமுல் காங்கிரஸ்?



மேற்குவங்கம், மே. 07–
மேற்கு வங்க தேர்தல் முடிவுகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தை நாட திரிணாமுல் காங்கிரஸ் முடிவு செய்துள்ளது. மேற்குவங்க முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்ய மறுத்த மம்தா பானர்ஜி, ‘‘அவர்கள் என்னை பதவிநீக்கம் செய்து குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தட்டும் என்றும் வாக்கு எண்ணிக்கையில் முறைகேடு செய்து தேர்தலை பாஜக கொள்ளையடித்துவிட்டதாக குற்றம் சாட்டி உச்ச நீதிமன்றத்தை நாடப்போவதாகவும் கூறியுள்ளார்.

## புதுச்சேரி ரிசார்ட்டில் அதிமுக எம்.எல்.ஏ.க்கள்!



புதுச்சேரி, மே. 07–
பெரும்பான்மை கிடைக்காததால் விஜய் ஆட்சி அமைக்க முடியாத சூழலில், 20க்கும் மேற்பட்ட அதிமுக எம்எல்ஏக்கள் புதுச்சேரியில் உள்ள ரிசார்ட்டில் தங்க வைக்கப்பட்டுள்ள சம்பவம் தமிழக அரசியலில் பரபரப்பை கிளப்பி உள்ளது.

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய், ஆட்சி அமைக்க, போதுமான எண்ணிக்கையில் எம்.எல்.ஏ.,க்கள் ஆதரவில்லை. இதனால் ஆட்சி அமைக்க முடியாமல் தவெக தவித்து வருகிறது. இதனால் தமிழக அரசியல் களம் தேர்தலுக்கு முந்தைய நிலையை விட அதீத பரபரப்பாகி விட்டது.

இந்த பரபரப்பான சூழலில், 20க்கும் மேற்பட்ட அதிமுக எம்எல்ஏக்கள் புதுச்சேரியில் உள்ள ரிசார்ட்டில் தங்க வைக்கப்பட்டுள்ள உள்ளனர். சிவி சண்முகம் ஏற்பாட்டில் அதிமுக எம்எல்ஏக்கள் ஓ.எஸ். மணியன், தளவாய் சுந்தரம், மோகன், அருள்மொழி தேவன், அக்ரி கிருஷ்ணமூர்த்தி, வெங்கடாசலம் ஆகியோர் விடுதியில் தங்கி உள்ளனர்.

தவெகவுக்கு அதிமுக ஆதரவு அளிக்க வேண்டும் என இபிஎஸ்யிடம் சிவி சண்முகம் வலியுறுத்தியதாக கூறப்படும் சூழலில், இந்த அரசியல் நகர்வு பரபரப்பை கிளப்பி இருக்கிறது. இந்த சூழலில் அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் இன்று அவர்களை சந்திக்க புதுச்சேரி செல்ல இருப்பதாக வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

# மதுரை மணி

தலையங்கம்

வியாழக்கிழமை 07.05.2026

விசுவாவசு தமிழ் வருடம்

சித்திரை மாதம் 24-ம் தேதி

## ஹண்டா வைரஸ் மற்றொரு ஆபத்தானது..?



உலகம் கோவிட்–19 பாதிப்பிலிருந்து மீண்டு வரும் வேளையில், ஹண்டா வைரஸ் (Hantavirus) போன்ற பிற வைரஸ்கள் குறித்த செய்திகள் மக்களிடையே கவலையை ஏற்படுத்தி வருகின்றன. இருப்பினும், இவ்விரு வைரஸ்களின் தன்மையும், அவை பரவும் விதமும் முற்றிலும் மாறுபட்டவை. கொரோனா வைரஸ் காற்றின் மூலம் மிக வேகமாகப் பரவும் நிலையில், ஹண்டா வைரஸ் பரவுவதற்கு வேறு ஒரு காரணம் உள்ளது. அப்படியென்றால், இவ்விரண்டில் எது அதிக ஆபத்தானது? யாருக்கு அதிக ஆபத்து உள்ளது? இதை அனைவரும் அறிந்துகொள்வது அவசியம்.

கொரோனா வைரஸ் (SARS–CoV–2), பாதிக்கப்பட்ட ஒருவர் இருமும்போதோ அல்லது தும்மும்போதோ வெளியேறும் நீர்த்துளிகள் மூலம் காற்றின் வழியாக மிக வேகமாகப் பரவுகிறது. ஆனால், ஹண்டா வைரஸ் பொதுவாக ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு நேரடியாகப் பரவுவதில்லை; இது கொறித்துண்ணிகளின் (எலிகள் போன்ற உயிரினங்களின்) கழிவுகள் அல்லது உமிழ்நீருடன் ஏற்படும் தொடர்பு மூலமாகவே பரவுகிறது.

### இறப்பு விகிதம்

ஹண்டா வைரஸ், கொரோனா வைரஸை விடப் பல மடங்கு அதிக ஆபத்தானது. ஹண்டா வைரஸ் நுரையீரல் நோய்க்குறியால் (HPS) பாதிக்கப்பட்டவர்களுக்கான இறப்பு விகிதம் சுமார் 38% ஆகும்; இது கோவிட்–19–க்கான இறப்பு விகிதத்தை விட மிக அதிகமாகும்.

### முக்கிய அறிகுறிகள்

காய்ச்சல், தலைவலி மற்றும் தசை வலி போன்ற பொதுவான அறிகுறிகள் இவ்விரு வைரஸ் தொற்றுகளுக்கும் காணப்படுகின்றன. இருப்பினும், ஹண்டா வைரஸ் நுரையீரலில் நீர் கோர்த்தலை (HPS) ஏற்படுத்துகிறது; அதேவேளையில், கொரோனா வைரஸ் முக்கியமாகச் சுவாசச் சிரமம் மற்றும் நிமோனியா பாதிப்பை ஏற்படுத்துகிறது.

### யாருக்கு அதிக ஆபத்து?

கொரோனா வைரஸ் தொற்று யாருக்கு வேண்டுமானாலும் ஏற்படக்கூடும் என்றாலும், முதியவர்களுக்கும் நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இதில் அதிக ஆபத்து உள்ளது. ஹண்டா வைரஸைப் பொறுத்தவரை, எலிகளின் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளில் வசிப்பவர்களுக்கும் அங்குப் பணிபுரிபவர்களுக்கும் (எடுத்துக்காட்டாக: விவசாயிகள், முகாம்களில் தங்குபவர்கள்) அதிக ஆபத்து உள்ளது.

## தமிழகம், மே.வங்கத்தில் பி.எம்., ஸ்ரீ பள்ளி தலைமை செயலர்களுக்கு விரைவில் கடிதம்!

புதுடில்லி, மே. 07–

மேற்கு வங்கம் மற்றும் தமிழகத்தில் ஆட்சி மாறி இருக்கும் சூழலில், முடங்கி கிடக்கும் பி.எம்., ஸ்ரீ பள்ளித் திட்டத்தை அமல்படுத்த, மத்திய அரசு புதிய முயற்சியை முன்னெடுத்துள்ளது.




இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட கோரி, இரு மாநில தலைமை செயலர்களுக்கும் விரைவில் கடிதம் எழுதவுள்ளது.

தேசிய கல்வி கொள்கையின் கீழ், நாடு முழுதும் 14,500 அரசு பள்ளிகளின் தரம் உயர்த்தும் பி.எம்.,ஸ்ரீ திட்டத்தை அமல்படுத்தும் நடவடிக்கையில் மத்திய அரசு ஈடுபட்டு வருகிறது.

வடமாநிலங்களில் பா.ஜ., மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் ஆளும் மாநிலங்களில், இத்திட்டம் அமலாகி உள்ளது. எதிர்ப்பு தமிழகம், கேரளா, மேற்கு வங்கம், பஞ்சாப் போன்ற மாநிலங்களில், இதற்கு முன் ஆட்சியில் இருந்த தி.மு.க., – திரிணமுல் காங்., இடதுசாரிகள், ஆம் ஆத்மி உள்ளிட்ட கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தன.

சமீபத்தில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில், மேற்கு வங்கத்திலும், தமிழகத்திலும் ஆட்சி மாறி இருக்கும் சூழலில், பி.எம்., ஸ்ரீ திட்டத்தை அமல்படுத்த மத்திய அரசு மீண்டும் தீவிரம் காட்ட தொடங்கியுள்ளது. இது தொடர்பாக, இரு மாநில தலைமைச் செயலர்களுக்கும் விரைவில் மத்திய அரசு கடிதம் அனுப்பி வைக்கவுள்ளது.

இது குறித்து மத்திய உயரதிகாரிகள் கூறுகையில், 'ஓரிரு நாளில், மத்திய அரசு கடிதம் அனுப்பவுள்ளது. பி.எம்., ஸ்ரீ திட்டத்தை விரைந்து அமல்படுத்தும் வகையில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு வலியுறுத்தவுள்ளது.


'இரு மாநிலங்களிலும் பி.எம்.,ஸ்ரீ திட்டம் நிச்சயம் அமலாகும்' என நம்பிக்கை தெரிவித்தனர்.

கருவி முன்னதாக, பி.எம்.,ஸ்ரீ திட்டத்தை அமல்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத மாநிலங்களுக்கு 2024 –25ம் நிதியாண்டுக்கான, 'சமக்ரா சிக்ஷா அபியான்' திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியை மத்திய அரசு நிறுத்தி வைத்தது. பி.எம்.,ஸ்ரீ திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியை பெற வேண்டுமெனில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது அவசியம். ஆனால், எதிர்க்கட்சிகளோ, தேசிய கல்வி கொள்கை போன்ற மத்திய திட்டங்களை மாநிலங்கள் மீது திணிக்கும் நோக்கில், கல்விக்கான நிதியை மத்திய அரசு ஒரு கருவியாக பயன்படுத்தி வருகிறது என குற்றஞ்சாட்டுகின்றன.

## இந்தியாவில் Xiaomi TV S Mini LED சீரிஸை அறிமுகப்படுத்திய சியோமி; அதிநவீன டிவி தொழில்நுட்பம்!

சென்னை , மே. 07–

சியோமி இந்தியா தனது முதல் Mini LED தொலைக்காட்சி வரிசையான Xiaomi TV S Mini LED Series–ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. QD Mini–LED தொழில்நுட்பம், Quantum Dot நிறத் தொழில்நுட்பம் மற்றும் துல்லியமான Mini LED backlighting ஆகியவற்றின் இணைப்பால் உருவான இந்த சீரிஸ், 1200 நிட்ஸ் வரை உச்ச பிரகாசம், ஆழமான கருப்பு நிறங்கள், உயர்தர காண்ட்ராஸ்ட் மற்றும் நுணுக்கமான காட்சி தெளிவை வழங்குகிறது. Dolby Vision, HDR10+, Filmmaker Mode மற்றும் 4K Ultra HD ஆதரவுடன், சினிமா தரமான பார்வை அனுபவத்தை வழங்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.




நவீன உள்ளடக்க அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் DLG 120Hz, MEMC மற்றும் Auto Low Latency Mode (ALLM) போன்ற அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. Xiaomi Sound மூலம் ட்யூன் செய்யப்பட்ட 34W க்வாட்–ஸ்பீக்கர் சிஸ்டம், Dolby Audio, DTS:X மற்றும் DTS Virtual:X ஆதரவுடன் முழுமையான ஒலி அனுபவத்தை வழங்குகிறது. PatchWall இடைமுகம், Xiaomi TV+, AirPlay 2, Google Cast, Miracast, dual–band Wi–Fi மற்றும் Bluetooth இணைப்பு போன்ற அம்சங்களும் இதில் உள்ளன. இதுகுறித்து கருத்து தெரிவித்த சியோமி இந்தியாவின் தலைமை மார்கெட்டிங் அதிகாரி அனுஜ் ஷர்மா, "பெரிய திரைகளுக்கான தேவை அதிகரித்து வரும் நிலையில், திரை அளவோடு சேர்த்து டிஸ்ப்ளே தரத்தையும் மேம்படுத்துவதில் Xiaomi கவனம் செலுத்தியுள்ளது" என்றார்.

55 அங்குலம், 65 அங்குலம் மற்றும் 75 அங்குலம் அளவுகளில் கிடைக்கும் Xiaomi TV S Mini LED Series–ன் விலை முறையே ₹51,999, ₹71,999 மற்றும் ₹99,999 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வங்கி சலுகைகளுடன் இவை ₹48,999 முதல் கிடைக்கும். இந்த சீரிஸ் ஏப்ரல் 22, 2026 முதல் mi.com, முன்னணி ஆன்லைன் தளங்கள் மற்றும் ரீட்டெயில் கடைகளில் விற்பனைக்கு வரும் நிலையில், முன்பதிவுகள் தற்போது தொடங்கியுள்ளன. முன்பதிவு காலத்தில் ரூ.10,000 வரை வங்கி சலுகை, கூடுதல் வாரண்டி மற்றும் 12 மாதங்கள் வரை கட்டணமில்லா EMI வசதியும் வழங்கப்படுகிறது.

## JLR இந்தியா ரேஞ்ச் ரோவர் SV மாடல்கள் விலை ₹75 லட்சம் வரை குறைத்தது!

சென்னை, மே. 07–

இந்தியா–இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் FTA அமலாக்கத்தை முன்னிட்டு, இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ரேஞ்ச் ரோவர் CBU மாடல்கள் மறு நிர்ணயம் செய்யப்பட்ட விலைகளை JLR இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த புதிய விலை மாற்றம் உடனடியாக அமலுக்கு வந்துள்ளது.

இதன்படி, ரேஞ்ச் ரோவர் SV மாடலின் விலை ₹425 லட்சத்திலிருந்து ₹350 லட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல், ரேஞ்ச் ரோவர் ஸ்போர்ட் SV மாடலின் விலை ₹275 லட்சத்திலிருந்து ₹235 லட்சமாக குறைக்கப்பட்டுள்ளது. மேலும், ரேஞ்ச் ரோவர் SV மாடலில் புதிய அல்ட்ரா மெட்டாலிக் பெயிண்ட் விருப்பங்களும் ஸ்டாண்டர்டு அம்சங்களாக வழங்கப்படுகின்றன.




JLR இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ராஜன் அம்பா கூறுகையில், FTA ஒப்பந்தத்தின் நன்மைகள் நேரடியாக வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி இருப்பதாக தெரிவித்தார். அதேசமயம், இந்தியாவில் தயாரிக்கப்படும் ரேஞ்ச் ரோவர், ரேஞ்ச் ரோவர் ஸ்போர்ட், எவோக், வெலர் மற்றும் டிஸ்கவரி ஸ்போர்ட் மாடல்கள் விலைகள் எந்த மாற்றமும் இல்லை என்றும், ஸ்லோவாக்கியாவில் தயாரிக்கப்படும் டிஃபென்டர் மற்றும் டிஸ்கவரி மாடல்களும் தற்போதைய விலை வரம்பில் தொடரும் என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## மொபைல் இனோவேஷனில் கூட்டாண்மை: ஸ்டார்ட் அப்கள் வரவேற்கும் சாம்சங் ஆராய்ச்சி மையம்!

கோயம்புத்தூர் , மே. 07–

சாம்சங் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள் பெங்களூரு மற்றும் நொய்டா இணைந்து, 2026–ஆம் ஆண்டுக்கான 'சாம்சங் மொபைல் முன்னேற்றம் (SMA)' திட்டத்தின் புதிய பதிப்பை அறிவித்துள்ளன. மொபைல் தொழில்நுட்பங்களில் புதுமையை உருவாக்கும் இந்த உலகளாவிய இன்கியுபேஷன் திட்டம், ஸ்டார்ட் அப்களை சாம்சங்கின் உலகளாவிய சூழலமைப்புடன் இணைந்து எதிர்கால மொபைல் அனுபவங்களை உருவாக்க அழைக்கிறது. திறந்த புதுமை நோக்கில் செயல்படும் இந்த திட்டம், ஆழ்ந்த தொழில்நுட்ப ஸ்டார்ட்அப்கள் மற்றும் சாம்சங்கின் ஆராய்ச்சி திறன்களை ஒருங்கிணைக்கிறது. இந்த திட்டத்தின் முக்கிய அம்சமாக, கருத்து நிரூபிப்பு (PoC) உருவாக்கத்திற்கு பங்கு உரிமை இல்லாமல் 50,000 அமெரிக்க டாலர் வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. இதன் மூலம் ஸ்டார்ட்அப்கள் தங்களது தீர்வுகளை சாம்சங் சூழலில் சோதித்து, பின்னர் விரிவுபடுத்தும் வாய்ப்பைப் பெறுகின்றன. செயற்கை நுண்ணறிவு, விரிவாக்கப்பட்ட யதார்த்தம், பாதுகாப்பு, சுகாதாரம், கேமரா, ஒலி மற்றும் அணிகலன் சாதனங்கள் போன்ற துறைகளில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சாம்சங் ஆராய்ச்சி நிறுவனம் இந்தியா, பெங்களூருவின் மேலாண்மை இயக்குநர் மற்றும் மூத்த துணைத் தலைவர் மோகன் ராவ் கோலி மற்றும் நொய்டாவின் மேலாண்மை இயக்குநர் க்யுங்க்யுன் ரூ ஆகியோர், இந்த திட்டம் நீண்டகால புதுமை கூட்டாண்மைகளை உருவாக்கும் என தெரிவித்துள்ளனர்.




ஏப்ரல் முதல் ஜூன் 30, 2026 வரை விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஜூலை மாதத்தில் மதிப்பாய்வு, செப்டம்பரில் விளக்க நாள் (Pitch Day), அதன் பின் இறுதி தேர்வு நடைபெறும். அக்டோபரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்டார்ட்அப்களுக்கு நிதி உதவி, வழிகாட்டுதல் மற்றும் சாம்சங் தயாரிப்பு சூழலமைப்பில் அணுகல் வழங்கப்படும். கருத்து நிரூபிப்பு நிறைவு நிகழ்வின் மூலம் திட்டம் முடிவடையும். வாய்ஸ் நுண்ணறிவு, நான்கு பரிமாண மாதிரிவடிவு மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளில் முன்பு இணைந்து பணியாற்றிய அனுபவத்துடன், SMA 2026 திட்டம் ஸ்டார்ட்அப்களுக்கு உலகளாவிய வளர்ச்சி வாய்ப்புகளை உருவாக்குகிறது.

## குழந்தை பால் குப்பிகள்: கொதிக்க வைப்பது போதுமா?

## அறிவியல் அடிப்படையிலான நுண்ணுயிர் நீக்கத்தை முன்வைக்கும் பிலிப்ஸ்!





மதுரை , மே. 07–

குழந்தைகளின் பால் குப்பிகளை கொதிக்க வைத்து சுத்தம் செய்வது மட்டுமே போதுமானது என்ற கேள்வியை எழுப்பும் வகையில், Philips தனது புதிய விழிப்புணர்வு பிரச்சாரத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையில், நுண்ணுயிர் நீக்கம் (sterilization) குழந்தைகளின் சுகாதாரத்திற்கான சிறந்த பாதுகாப்பை வழங்குகிறது என நிறுவனம் வலியுறுத்துகிறது. இந்த முயற்சிக்காக நடிகை Yami Gautam Dhar விளம்பர தூதராக இணைந்துள்ளார்.

இந்த பிரச்சாரம், பாரம்பரியமாக பின்பற்றப்படும் "கொதிக்க வைக்கும்" முறையை மீளாய்வு செய்யத் தூண்டுகிறது. பிலிப்ஸ் அவென்ட் நுண்ணுயிர் நீக்கி பயன்படுத்தும் வீடுகளில், குழந்தைகளுக்கு நோய் தொற்று ஏற்படும் சாத்தியம் குறைவதாக சமீபத்திய கணக்கெடுப்புக்கு சுட்டிக்காட்டுகின்றன. மேலும், இது கொதிக்க வைப்பதை விட இரண்டு மடங்கு சிறந்த கிருமி பாதுகாப்பை வழங்குகிறது என்றும் நிறுவனம் தெரிவித்துள்ளது.

"நுண்ணுயிர் நீக்கத்தின் முக்கியத்துவம் பல பெற்றோர்கள் இன்னும் முழுமையாக உணரவில்லை. எங்கள் ஆய்வுகள், இதைப் பயன்படுத்தும் குடும்பங்களில் குழந்தைகள் குறைவாக நோய்வாய்ப்படுகிறது என்பதை காட்டுகின்றன," என்று Smit Shukla கூறினார். அறிவியலும் அக்கறையும் இணையும் இந்த அணுகுமுறை, பெற்றோர்கள் அறிவார்ந்த முடிவுகளை எடுக்க உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.



## தொழில் முன்னேற்றம் காண வாஸ்து குறிப்புகள்!




ஒவ்வொருவரும் தாங்கள் செய்யக்கூடிய வேலை, தொழில், வியாபாரத்தில் உயரங்களை தொட வேண்டும், தங்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றம், எதிர்பார்த்த பொருளாதார நிலையில் அடைய வேண்டும் என்ற எண்ணம் மனதில் எப்பொழுதும் இருக்கும்.

அதிலும் குறிப்பாக ஒரு சிலருக்கு சரியான தகுதி இருந்த போதிலும் தான் முன்னேறுவதில் பல சிக்கல்களை சந்திக்க நேரிட வாய்ப்பு உண்டு. இது அவர்களை சமயங்களில் வெற்றி கிட்டாததற்கான நிலையாக மாற்றுகிறது. இது போன்ற விஷயங்கள் தங்களுடைய வீட்டின் திசைகள் கூட காரணமாக அமைகிறது. வீட்டின் எந்த ஒரு திசையை வாஸ்து சாஸ்திரத்தின்படி சீர் செய்வதன் மூலம் தாங்கள் செய்யக்கூடிய தொழில் எதிர்பார்த்தன் வெற்றியை பெறலாம் என்பதை இங்கே அறிந்து கொள்வோம்.

### வாஸ்து திசைகளைச் சீர்செய்வதன் மூலம் உங்கள் தொழிலை மேம்படுத்திக்கொள்ளுங்கள்

1) வாஸ்து நிபுணர்களின் கூற்றுப்படி, ஒருவன் நான் எதிர்பார்த்த முன்னேற்றத்திற்காக கடினமாக உழைத்தாலும் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை எனில், அந்த தவறு உங்களிடம் இல்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். மாறாக சில விஷயங்களை உங்கள் வீட்டில் சீர் செய்வதன் மூலம் உங்களுடைய வெற்றிக்கான சூழலை அடைய முடியும்.

2) சிலருக்கு வீட்டில் இருந்து பணிபுரியக்கூடிய வாய்ப்பு அமைந்திருக்கும். அவர்கள் சரியான திசையில் அமர்ந்து பணியாற்றுவதை ஒரு பக்கமாக எடுத்துக் கொள்வதன் மூலம், தங்களுடைய வேலைகள் வேகமாக முடிப்பதோடு அவர்களுடைய பணியில் எதிர்பார்த்த முன்னேற்றத்தை காணலாம். வீட்டிலிருந்து பணிபுரியும் போது வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி அமர வேண்டும். அதிலும் குறிப்பாக வடக்கு திசையை நோக்கி அமர்ந்திருப்பது மிகுந்த சாதகம் பலனை தரக்கூடியதாக இருக்கும்.

3) உங்களுடைய வீட்டின் வடக்கு சுவருக்கு பச்சை அல்லது நீல நிற வர்ணம் பூசுவது நன்மை தரும். இது உங்களுக்கு லாபத்தை ஈட்டுவதற்கான வாய்ப்புகளை பெற்று தரும். அதே சமயம் இந்த திசையில் எந்தவித குப்பைகள் குறித்து வைக்க வேண்டாம். எப்போதும் இந்த பகுதியை தூய்மையாக பராமரிக்கவும். மேலும் இந்த திசையில் உள்ள சுவருக்கு தவறுதலாக கூட சிவப்பு நிறத்தில் வர்ணம் பூசக்கூடாது.

4) உங்களுடைய பணிகளில் ஸ்திரத்தன்மையும், மன உறுதியான செயல்பாடு ஏற்பட, உங்கள் வீட்டின் தென்மேற்கு மூலையில் எப்போதும் கனமான இந்த ஒரு பொருளையும் வைக்க வேண்டாம். அந்த பகுதிகளில் உங்களுடைய முன்னோர்களின் புகைப்படத்தை தங்க நிற சட்டத்தில் வைத்து பூஜை செய்வது நல்லது.

5) நீங்கள் எந்த விதமான பணிகளை செய்தாலும், அது சரியான திசையில் செல்லவும், உங்களுக்கு முன்னேற்றத்தை தரவும் சரியான வாஸ்துவை பின்பற்றுவது நல்லது.

பெரும்பாலான அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் வெற்றியின் ஏணியில் ஏறுவதற்கு, கடின உழைப்பு மட்டுமல்லாமல், பல நேரங்களில் அதிர்ஷ்டமும் மிக முக்கியமாக அமைகிறது. வாஸ்து சாஸ்திரத்தின் படி வெற்றியின் உச்சியை அடைய சரியான வாஸ்து, சரியான வாஸ்து திசையில் அமைந்திருப்பது மிகவும் முக்கியமானது.

## புதுச்சேரி சட்டசபை கலைப்பு!



புதுச்சேரி, மே. 07–

புதுவையின் 16வது சட்டப்பேரவைக்கான தேர்தல் நடந்து முடிந்து புதிய எம்.எல்.ஏக்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட எம்.எல்.ஏ.க்களை அங்கீகரித்து இந்திய தேர்தல் ஆணையம் அரசியல் அமைப்புச் சட்டம் 73–வது பிரிவு அடிப்படையில் அறிவிக்கை வெளியிட்டுள்ளது. அதன் அடிப்படையில் புதிய எம்.எல். ஏக்கள் தொகுதிகளில் அதிகாரத்தை பெறுகின்றனர்.

அதனால் புதுவை சட்டப்பேரவை கலைக்கப்பட்டதாக சட்டமன்ற செயலாளர் தயாளன் தெரிவித்துள்ளார். 15வது சட்டப்பேரவையின் பதவிக்காலம் 15.6.26 வரை இருக்கிறது. முன்கூட்டியே தேர்தல் நடந்து முடிந்து முடிவுகள் வெளியிடப்பட்டதால் இப்போது சட்டப்பேரவையும் கலைக்கப்பட்டுள்ளது.

புதிய சட்டப்பேரவையில் ஆட்சி அமைக்க பெரும்பான்மை பலமான 16 எம்.எல்.ஏக்களில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள என்.ஆர். காங்கிரஸ் 12, பாஜக 4, அதிமுக 1, லஜக 1 என 18 எம்.எல்.ஏக்களைப் பெற்றுள்ளது. பெரும்பான்மை பலம் உள்ள என்.ஆர். காங்கிரஸ் தலைவர் ரங்கசாமி ஆட்சி அமைக்க எப்போது உரிமைக் கோருகிறாரோ அப்போது கவர்னர் இந்த விஷயத்தில் முடிவு எடுப்பார்.

15வது சட்டப்பேரவையின் தலைவராக பதவி வகித்த செல்வம் புதியதாக அமையும் அரசின் சட்டப்பேரவைத் தலைவர் அல்லது தற்காலிக பேரவைத் தலைவர் பதவி ஏற்கும் வரை பதவியில் இருப்பார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## உயிருக்கே ஆபத்து.. மயோனைஸ் சாப்பிட மேலும் தடை..!



இன்றைய காலத்தில் துரித உணவுகளை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை சாப்பிட்டு வருகின்றனர். இதனால், சிறு வயதிலேயே உடல் நலப் பிரச்னைகளை அவர்கள் சந்திக்கின்றனர். அதில் ஒன்று மயோனைஸ். சிக்கன், சிக்கன் கிரில், ஷவர்மா போன்ற உணவுகளுக்கு கடைகளில் மயோனைஸ் சேர்த்து தரப்படுகிறது. இந்த மயோனைஸ் முழுக்க முழுக்க பச்சை முட்டை, எண்ணெய், எலுமிச்சை சாற்று போன்றவையால் தயாரிக்கப்படுகிறது.


இதில் பயன்படுத்தப்படும் பச்சை முட்டை கொண்ட தயாரிக்கப்படும் மயோனைஸால் salmonella Infection போன்ற பாக்டீரியா தொற்று ஏற்படும் அபாயம் இருக்கிறது. இதனால், மயோனைஸ் சாப்பிட்டதல் உடல் நலப் பிரச்னைகள் ஏற்படக் கூடும். இதனால், வயிற்றுப்போக்கு, காய்ச்சல், வாந்தி, மயக்கம் போன்றவை ஏற்படலாம். சமைத்த முட்டைகளுடன் ஒப்பிடும்போது, பச்சை முட்டை செரிமானமாவது கடினம். இதனால், சிலருக்கு வயிறு உப்புசம், வாயு, வயிற்றுப்போக்கு ஏற்படலாம். இதனால், மயோனைஸ் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும் என மருத்துவர்கள் கூறி வருகின்றனர்.

மயோனைஸ்க்கு தடை

இந்த நிலையில் தான், தமிழகத்தில் மயோனைஸ் விற்பனை செய்ய மேலும் ஓராண்டு தடை செய்யப்பட்டுள்ளது. 2027ஆம் ஆண்டு ஏப்ரல் வரை தமிழகம் முழுவதும் மயோனைஸ் விற்பனை செய்ய தடை விதிக்கப்படுகிறது. பச்சை முட்டையில் இருந்து தயாரிக்கப்படும் மயோனைஸில் சால்மொனெல்லா போன்ற ஆபத்தான பாக்டீரியாக்கள் இருக்கிறது.


இது உணவில் கலந்து உட்கொண்டால் உடல்நலப் பிரச்னைகள் ஏற்படும் அபாயம் உள்ளது. இதனை கருத்தில் கொண்டு, தமிழக அரசு மயோனைஸ் தடையை மேலும் ஓராண்டு நீடித்துள்ளது. குறிப்பாக, ஹோட்டல்கள், சாலையோர கடைகளில் பச்சை முட்டை மயோனைஸ் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதற்கு பதிலாக முட்டை இல்லாத மயோனைஸ் பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

கடந்த ஆண்டே தமிழகத்தில் மயோனைஸ் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது. இந்த தடை ஏப்ரலல் 8ஆம் தேதி வரை அமலில் இருக்கும் என கூறப்பட்டது. இந்த நிலையில், தற்போது மயோனைஸ் பயன்படுத்த மேலும் ஓராண்டுக்கு தடை நீடிக்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சினிமா துளிகள்..!

## ஜான்வி கபூருக்கு விரைவில் திருமணமா?



பாலிவுட் சினிமாவின் கனவுக்கன்னியாக கோலோச்சிய மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் மகள் ஜான்வி கபூர். இவர் கடந்த 2018–ம் ஆண்டு பாலிவுட்டில் வெளியான ‘தடாக்’ திரைப்படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானார். தொடர்ந்து ‘ரூஹி’, ‘குட் லக் ஜெர்ரி’, ‘மிலி’ உள்ளிட்ட பல்வேறு படங்களில் நடித்து பாலிவுட்டில் தனக்கென தனி இடம் பிடித்தார்.

இதையடுத்து கடந்த ஆண்டு வெளியான ‘தேவரா’ திரைப்படத்தில் ஜூனியர் என்.டி.ஆருக்கு ஜோடியாக நடித்து தெலுங்கு சினிமாவில் கால்பதித்தார். அடுத்ததாக ராம் சரண் நடிப்பில், ஏ.ஆர்.ரகுமான் இசையில் உருவாகும் ‘பெத்தி’ திரைப்படத்தில் ஜான்வி கபூர் நடித்து வருகிறார். இவர் அவ்வப்போது தனது சமூக வலைத்தள பக்கத்தில் கவர்ச்சி புகைப்படங்களை வெளியிட்டு ரசிகர்களை குஷிப்படுத்தி வருகிறார்.

இதற்கிடையில் தொழில் அதிபருடன், ஜான்வி கபூருக்கு விரைவில் திருமணம் நடைபெற இருப்பதாக தகவல் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது. இதற்கு ஜான்வி கபூரின் தந்தையும், பட தயாரிப்பாளருமான போனி கபூர் இதற்கு விளக்கம் அளித்துள்ளார். “எனது மகள் திருமணம் தொடர்பாக வெளியாகும் தகவலில் உண்மை இல்லை. யாரும் இதனை நம்பவேண்டாம்”, என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம் ஜான்வி கபூர் திருமணம் பற்றிய வதந்திக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

# மக்கள் தீர்ப்பின்படி விஜய் முதல்-அமைச்சராக பதவியேற்பதுதான் சரி - திருமாவளவன்!



சென்னை, மே. 07–

விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி ஒருவர் கூறுகையில், ‘கியாஸ் சிலிண்டர் விலை உயர்வை கண்டித்து இன்று விடுதலை சிறுத்தைகள் கட்சியும், கம்யூனிஸ்டு கட்சிகளும் இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் கம்யூனிஸ்டு கட்சியுடன் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. இதில், த.வெ.க.வுக்கு ஆதரவு அளிக்கலாமா? வேண்டாமா? என்பது குறித்து ஆலோசிக்கப்படும். அதன் பின்னர், கட்சியின் உயர்நிலைக் குழு கூட்டம் நடைபெற்று அறிவிப்பு வெளியிடப்படும்’ என்றார்.

இந்நிலையில் த.வெ.க. தலைவர் விஜய்யை பதவியேற்க அனுமதிக்க வேண்டும் என்று விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், “தனிப்பெரும் கட்சியாக த.வெ.க.வை மக்கள் தேர்ந்தெடுத்திருக்கின்றனர். எனவே விஜய்யை பதவியேற்க அனுமதிக்க வேண்டும். ஆனால் கவர்னர் இன்னும் முடிவு எடுக்காமல் குழப்பம் உருவாவதற்கு இடம் கொடுக்கிறார். இது ஏற்புடையதல்ல..

118 எம்எல்ஏக்கள் ஆதரவை காண்பித்துவிட்டு பதவியேற்புக்கு வாருங்கள் என கவர்னர் சொல்ல முடியாது. த.வெ.க. தலைவர் விஜய்க்கு பெரும்பான்மை இருக்கிறதா என்பதை சட்டமன்றத்தில்தான் நிரூபிக்க வேண்டும். அமித் ஷா விளையாட்டு தமிழகத்தில் அரங்கேறுகிறது. பா.ஜ.க. தலையீட்டை தமிழகத்தில் நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

மக்கள் தீர்ப்பின் படி விஜய் முதல் – அமைச்சராக பதவியேற்பதுதான் சரி. எங்களுடன் இணைந்து த.வெ.க .ஆட்சியமைக்க விரும்புவதை நாங்கள் பரிசீலிக்கிறோம். ஆட்சி அமைக்க ஆதரவு அளிப்பது தொடர்பாக விஜய் கடிதம் எழுதினார். போனில் பேசினார்.. ஆலோசித்து முடிவு செய்வோம் என்று கூறியிருக்கிறோம்.” என்று திருமாவளவன் கூறினார்.

# தவெக தனது பெரும்பான்மையை நிரூபிக்க கவர்னர் அவகாசம் தர வேண்டும் - இந்திய கம்யூ. கட்சி!



சென்னை, மே. 07–

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–


தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் 23–ம் தேதி நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் எந்தவொரு கட்சியும் தனித்து ஆட்சி அமைக்கும் வகையில், தெளிவான தீர்ப்பை வழங்கவில்லை. எனினும் தமிழக வெற்றிக் கழகத்திற்கு 108 உறுப்பினர்களை வழங்கி, அதனை தனிப்பெரும் முதன்மை எண்ணிக்கை கொண்ட கட்சியாக தேர்வு செய்துள்ளனர்.

இதன் அடிப்படையில் தவெக தலைவர் சி.ஜோசப் விஜய், கவர்னரை சந்தித்து ஆட்சி அமைக்கும் உரிமை கோரியுள்ளார். பதவி ஏற்புக்கு முன்பு தவெக, தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என கவர்னர் நிர்பந்திப்பது ஏற்புடையதல்ல.

தனிப்பெரும் எண்ணிக்கை கொண்ட தவெக, தனது பெரும்பான்மையை பேரவையில் நிரூபிக்க கவர்னர், அரசியலமைப்பு சட்டப்படி அவகாசம் தர வேண்டும். இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட்டில் நடந்த எஸ்.ஆர். பொம்மை வழக்கு உட்பட பல வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளில் சுப்ரீம் கோர்ட்டும் உறுதி செய்துள்ளது.

இவைகளை கருத்தில் கொண்டு தமிழ்நாடு கவர்னர், தவெக தனது பெரும்பான்மையை பேரவையில் நிரூபிக்க வாய்ப்பளித்து அரசியலமைப்பு சட்டம் மற்றும் சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புகளின் உணர்வை மதித்து நடக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கவர்னரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தபால் அலுவலகங்களில் புதிய விதிகள்.... மத்திய அரசின் புதிய உத்தரவு..!




புதுடெல்லி, மே. 07–

தபால் நிலையங்களுக்கான விதிமுறைகளில் மாற்றங்களைச் செய்து வரும் மத்திய அரசு, சமீபத்தில் மற்றொரு முக்கிய முடிவை எடுத்துள்ளது. வங்கி சார்ந்த பரிவர்த்தனைகளுக்கு ‘பான் அட்டை’ (PAN card) வைத்திருப்பதை அது கட்டாயமாக்கியுள்ளது. ‘வருமான வரி விதிகள் 2026’–இன் படி, தபால் நிலையங்களில் நிதிப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வாடிக்கை யாளர்கள் தங்கள் பான் விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

சேமிப்புக் கணக்குகள் மற்றும் வைப்புத் திட்டங்களில் வெளிப்படைத்தன்மையைக் கொண்டு வரும் நோக்கத்துடன் மத்திய அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. பான் அட்டை இல்லாத பட்சத்தில், ‘படிவம் 97’ (Form 97) சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. வங்கிக் கணக்கு தொடங்குதல், பணம் செலுத்துதல், பணம் எடுத்தல், கால வைப்புத் திட்டங்கள் மற்றும் முதலீட்டுத் திட்டங்கள் என அனைத்து விதமான பரிவர்த்தனைகளுக்கும் பான் அட்டை விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாகும்.

வருமான வரி விதிகள் 237, 211, 161, 160 மற்றும் 159 ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் பான் விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. ‘தபால் நிலைய ஆணை எண் 02/2026’–இன் அடிப்படையில் இந்தப்புதியவழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பான் அட்டை இல்லாத நிலையில், ‘படிவம் 97’–ஐச் சமர்ப்பிக்க வேண்டும். அதில், பெயர், முகவரி மற்றும் பரிவர்த்தனை தொடர்பான விவரங்கள் வழங்கப்பட வேண்டும். மேலும், அவற்றுக்கான துணை ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், இந்த ஆவணங்களைப் பாதுகாத்து வைக்கும் பொறுப்பு தபால் நிலையங்களையே சாரும். அத்துடன், தபால் நிலையத் திட்டங்கள் மூலம் கிடைக்கும் வட்டி வருமானத்தின் மீது ‘TDS’ (மூலத்திலேயே வரி பிடித்தம்) விலக்கு பெற விரும்பினால், ‘படிவம் 121’ (Form 121) சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்கு முன்னதாக, ‘படிவம் 15G’ மற்றும் ’15H’ ஆகியவை பயன்பாட்டில் இருந்தன. தபால் நிலையங்கள் இந்த ஆவணப் பதிவுகளை ஏழு ஆண்டுகளுக்குப் பாதுகாத்து வைக்க வேண்டும்.

இந்த ஆவணங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு (digitally updated) புதுப்பிக்கப்படும் காலம் வரை, அவற்றை முறையாகப் பராமரிக்க வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. அனைத்துத் தபால் நிலையங்களும் இந்த விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று அந்த ஆணை வலியுறுத்துகிறது. இருப்பினும், சமீப காலம் வரை தபால் நிலையங்களில் பான் அட்டையின் தேவை பெரிதாக இருக்கவில்லை. இதன் காரணமாக, பலரும் தங்கள் பான் அட்டையைத் தங்களுடன் எடுத்துச் செல்லும் வழக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் இனிமேல், நிதி சார்ந்த பரிவர்த்தனை களுக்காக நீங்கள் அஞ்சல் நிலையத்திற்குச் சென்றால், உங்கள் PAN அட்டையை உடன் எடுத்துச் செல்ல மறக்காதீர்கள். அவ்வாறு நீங்கள் மறந்தால், நிதி சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்களைச் சந்திக்க நேரிடலாம்.

# த.வெ.க. தலைவர் விஜய்க்கு பெருகும் ஆதரவு... ஆளுநருக்கு வலுக்கும் கண்டனம்!



சென்னை, மே. 07–

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் 108 இடங்களில் வெற்றிபெற்று பெரும்பான்மை கட்சியாக உருவெடுத்துள்ள தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் விஜயை ஆட்சியை அமைக்க வருமாறு ஆளுநர் அழைப்பு விடுக்காதது கண்டனத்துக்குள்ளாகி உள்ளது. இதுதொடர்பாக இன்று 2 முறையாக த.வெ.க. தலைவர் விஜய் ஆளுநரை சந்தித்துள்ளார்.

இதனிடையே, த.வெ.க. தலைவர் விஜயை பதவியேற்க அனுமதிக்க வேண்டும் என பலரும் தங்களது ஆதரவை தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், பதவி ஏற்புக்கு முன்பு தவெக, தனது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என ஆளுநர் நிர்பந்திப்பது ஏற்புடையதல்ல. அரசியலமைப்பு சட்டத்தை மதித்து ஆளுநர் செயல்பட வேண்டும். த.வெ.க. தனது பெரும்பான்மையை பேரவையில் நிரூபிக்க ஆளுநர், அரசியலமைப்பு சட்டப்பட அவகாசம் தர வேண்டும் என வலியுறுத்தி உள்ளார். இதேபோல், நடிகர் பிரகாஷ் கவர்னருக்கு கண்டனத்தை தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக நடிகர் பிரகாஷ்ராஜ் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ஆளுநரின் நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் அரசியலமைப்புக்கு முரணானது. நமக்குள்ளே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், விஜய்க்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. அவையில் தனது உரிமையை நிலை நாட்டிக்கொள்ள அவருக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் கூறுகையில், தனிப்பெரும் கட்சியாக த.வெ.க.வை மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். எனவே விஜயை பதவியேற்க அனுமதிக்க வேண்டும். ஆனால் ஆளுநர் இன்னும் முடிவு எடுக்காமல் குழப்பம் உருவாவதற்கு இடம் கொடுக்கிறார். இது ஏற்புடையதல்ல என தெரிவித்து இருந்தார்.

# வேலை வாய்ப்பு

## CSIR–மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI), சென்னை - 57 காலியிடங்கள்!

நிறுவனத்தின் பெயர்: சிஎஸ்ஐஆர்–மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (சிஎல்ஆர்ஐ), சென்னை

அறிவிப்பு எண்: 03/2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்

கல்வித் தகுதி: டிப்ளமோ/பி.இ./பி.டெக்./பி.எஸ்சி./எம்.பார்ம்/எம்.எஸ்சி

பணியிடத்தில்: சென்னை

நேர்காணல் தேதி: எழுத்துத் தேர்வு 21.05.2026, நேர்காணல் 25.05.2026 & 26.05.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://clri.org/

# காவல்துறை பாதுகாப்பு விலக்கியது ஏன்? விஜய் சொன்னது என்ன?



சென்னை, மே. 07–

சென்னை நீலாங்கரையில் உள்ள தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் வீட்டிற்கு செல்லும் இருபுறங்களிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது.

வெளிநபர் யாருக்கும் விஜய் இல்லம் இருக்கக்கூடிய சாலை வழியாக செல்ல அனுமதி இல்லை. டெலிவரி ஊழியர்கள் கூட தங்களது தகவல்களை பதிவு செய்த பிறகே அவ்வழியாக செல்ல அனுமதித்தனர்.

இந்த நிலையில், திடீரென த.வெ.க. தலைவர் விஜய் வீட்டின் முன்பு போடப்பட்டு இருந்த பாதுகாப்புகள் விலக்கிக்கொள்ளப்பட்டது பேசும்பொருளானது. இதுதொடர்பாக த.வெ.க. இணை பொதுச்செயலாளர் நிர்மல்குமார் கூறியதாவது:–

விஜய் கேட்டுக்கொண்டதால் காவல்துறை பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது. தனக்கு எந்தவித பாதுகாப்பும் வேண்டாம் என விஜய் சொல்லிவிட்டார். தேவைப்படும்போது விஜயே காவல்துறையை அழைப்பார். விஜய் வரும்பொதேல்லாம் பொதுமக்கள் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்டனர். பொதுமக்கள் சிரமத்துக்கு உள்ளாவதால் இந்த நடவடிக்கையை விஜய் எடுத்துள்ளார் என்றார்.

# அமித் ஷாவுடன் லஞ்ச் சாப்பிட்ட தலைவர்கள் என்ன ஆனார்கள் தெரியுமா?



கொல்கத்தா, மே. 07–

மேற்கு வங்க அரசியலில் கடந்த சில தசாப்தங்களாக நிலவி வந்த ஒரு சகாப்தம் முடிவுக்கு வந்திருக்கிறது. திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பிடி தளர்ந்து, பாரதிய ஜனதா கட்சி வங்கத்தைக் கைப்பற்றியுள்ளது. மம்தா பானர்ஜி பதவி விலக மறுத்தாலும், அரசியல் எதார்த்தம் அவர் கையைவிட்டுப்போய்விட்டது. 2020–ல் ஆகியோர் அமர்ந்து மதிய உணவு அருந்திய அந்தப் புகைப்படம் இன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. அன்று அமித்ஷாவுடன் அமர்ந்திருந்தவர்களில் அமித் ஷாவைத் தவிர மற்ற அனைவருமே இன்று தங்கள் மாநிலத்தின் அதிகாரப் பீடத்தை இழந்து நிற்கிறார்கள். 2026 மேற்கு வங்கத் தேர்தல் முடிவுகள் ஒரு பெரும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸ் வீழ்ச்சியடைந்து, பாரதிய ஜனதா கட்சி ஆட்சியைப் பிடித்துள்ளது. மதச் சார்பின்மை என்ற பெயரில் மம்தா செய்த அரசியல் தவறுகள், காங்கிரஸூடனான மோதல் மற்றும் பாஜகவின் சித்தாந்த ரீதியான வளர்ச்சி ஆகியவை இந்த மாற்றத்திற்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# "த.வெ.க.வை ஆட்சி அமைக்க அழைக்காவிட்டால்.." - தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ் கடும் எச்சரிக்கை!

சென்னை, மே. 07–

தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:– தமிழகத்தில் நடைபெற்று முடிந்த சட்டமன்ற தேரதலில் தமிழக வெற்றி கழகம் (த.வெ.க.) அதிகப்படியான தொகுதிகளில் வெற்றி பெற்று மக்களின் தெளிவான ஆதரவை பெற்றுள்ளது. மேலும் அகில இந்திய காங்கிரஸ் பேரியக்கமும் த.வெ.க. தலைவர் விஜய் அவர்களுக்கு தனது ஆதரவை அதிகாரப்பூர்வமாக வழங்கியுள்ளது.



இந்நிலையில், பெரும்பான்மை ஆதரவை பெற்றுள்ள கூட்டணியை ஆட்சி அமைக்க தமிழக கவர்னர் இதுவரை அழைக்காதது தமிழக மக்களிடையே மிகப்பெரிய சந்தேகத்தையும் அதிருப்தியையும் உருவாக்கியுள்ளது.

இந்த ஜனநாயக விரோத தாமதத்திற்கு பின்னால் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உள்துறை மந்திரி அமித்ஷா ஆகியோரின் அரசியல் அழுத்தம் செயல்பட்டு வருகிறது என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் வலுத்து வருகிறது. இதனை தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ் வன்மையாக கண்டிக்கிறது. மக்கள் அளித்த ஜனநாயக தீர்ப்பை மதித்து, பெரும்பான்மை ஆதரவை கொண்ட கூட்டணியை உடனடியாக ஆட்சி அமைக்க தமிழக கவர்னர் அழைக்க வேண்டும். இல்லையெனில் தமிழ்நாடு மாணவர் காங்கிரஸ் சார்பில் கவர்னர் மாளிகையை முற்றுகையிட்டு மிகப்பெரிய ஜனநாயக போராட்டம் நடத்தப்படும் என்பதை இந்த அறிக்கையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய கல்விக்கொள்கையின் ஒருபகுதியாக பள்ளி நிர்வாகக் குழு வழிகாட்டுதல்கள் வெளியீடு!

புதுடெல்லி, மே. 07–

மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான், பள்ளி நிர்வாகக் குழுக்களுக்கான புதிய வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்தினார். தேசியக் கல்விக் கொள்கை 2020–இன் இலக்குகளை அடைவதற்காக இலக்குகளாக இது பார்க்கப்படுகிறது. பள்ளி நிர்வாகத்தில் பெற்றோர்கள் மற்றும் உள்ளூர் சமூகத்தின் பங்களிப்பை அதிகரிப்பது இதன் முதன்மை நோக்கமாக உள்ளது. பள்ளியின் தினசரி




செயல்பாடுகள் மற்றும் நிதி மேலாண்மையில் வெளிப்படைத்தன்மையை கொண்டுவருதல். ஒவ்வொரு பள்ளியும் தங்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு மற்றும் கற்றல் உபகரணங்கள் குறித்து ஒரு விரிவான திட்டத்தைத் தயாரித்தல். டிஜிட்டல் கற்றல் வசதிகளை மேம்படுத்தவும், மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் முன்னுரிமை அளிக்கப்படும்.

ஆசிரியர்களின் வருகை மற்றும் மாணவர்களின் கற்றல் விளைவுகளை தொடர்ந்து கண்காணித்தல். மாணவர்களின் சேர்க்கை விகிதத்தை அதிகரிப்பது மற்றும் இடைநிற்றலைத் தடுப்பது குறித்து ஆலோசனைகள் வழங்கப்படும் உள்ளிட்டவை இந்த புதிய வழிகாட்டுதல்களின் முக்கிய அம்சங்களாக உள்ளன.

# கேரளத்தில் அடுத்த முதல்-மந்திரி யார்?

திருவனந்தபுரம், மே. 07–

கேரள சட்டசபை தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி 102 இடங்களை கைப்பற்றியது. இதில் காங்கிரஸ் மட்டும் 63 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இதனால் கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி அமைய உள்ளது.



அதே சமயத்தில் காங்கிரஸில் முதல்–மந்திரி பதவிக்கு கடும் போட்டி நிலவி உள்ளது. மூத்த தலைவரான ரமேஷ் சென்னிதலா, எதிர்க்கட்சி தலைவர் வி.டி.சதீசன், கே.சி. வேணுகோபால் எம்.பி. ஆகியோர் முதல்–மந்திரி பதவி மீது குறி வைத்து காய்களை நகர்த்தி வருகின்றனர்.

இந்தநிலையில் காங்கிரஸ் கட்சியில் முதல்–மந்திரியை தேர்வு செய்வதற்கான ஆலோசனை கூட்டம் இன்று (வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு திருவனந்தபுரத்தில் உள்ள காங்கிரஸ் கட்சியின் தலைமையகமான இந்திரா பவனில் நடைபெறுகிறது. இதில் காங்கிரஸ் கட்சியின் மேலிட பார்வையாளர்கள் முகுல் வாஸ்னிக், அஜய் மாக்கன் ஆகியோர் தலைமை தாங்குகிறார்கள். இதில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற 63 சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்கிறார்கள்.

இந்த கூட்டத்தில் மேலிட பார்வையாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடம் தனித்தனியாக கருத்துகளை கேட்டறிவார்கள். பின்னர் இது தொடர்பான அறிக்கை கட்சி தலைமைக்கு சமர்பிக்கப்படும். மேலும் மேலிட பார்வையாளர்கள், காங்கிரஸ் கூட்டணி கட்சி தலைவர்களிடமும் ஆலோசனை நடத்துவார்கள். இதையடுத்து மீண்டும் கூட்டம் கூடி, கட்சி மேலிடம் அறிவிக் கும் நபரை முதல்–மந்திரியாக எம்.எல்.ஏ.க்கள் தேர்வு செய்வார்கள் என கூறப்படுகிறது. எனவே கேரளத்தில் முதல்–மந்திரி தேர்வில் இன்னும் சில நாட்கள் தொடர்ந்து சிக்கல் நீடிக்கும் என காங்கிரஸ் வட்டாரத்தில் கூறப்படுகிறது.

# தொடர் விடுப்பு எடுத்த 51 அரசு மருத்துவ கல்லூரி டாக்டர்கள் பணிநீக்கம்!

அமராவதி, மே. 07–

ஆந்திராவில் உள்ள மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் உரிய அனுமதியின்றி கல்லூரி டாக்டர்கள் மற்றும் பேராசிரியர்கள் தொடர்ந்து விடுப்பு எடுத்து வருவதாக ஆந்திர அரசாங்கத்துக்கு புகார் அளிக்கப்பட்டது. இதுகுறித்து உரிய விசாரணை மேற்கொள்ள வலியுறுத்தி மருத்துவக் கல்வி இயக்குனரகத்துக்கு அந்த மாநிலத்தின் சுகாதாரத்துறை மந்திரி சத்யகுமார்யாதவ் உத்தரவிட்டார். அதன்பேரில் மாநிலம் முழுவதும் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் இருந்து மருத்துவக் கல்வி இயக்குனரக அதிகாரிகள் தகவல்களை சேகரித்து, அனுமதியின்றி பணிக்கு வராத மருத்துவர்களின் பட்டியலைத் தயாரித்தனர்.

இதனை தொடர்ந்து மருத்துவக் கல்வி இயக்குனரகத்தின் கீழ் பணியாற்றிய 51 டாக்டர்கள் அனுமதி இல்லாமல் பணிக்கு வராததால் நிரந்தரமாக பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். இதுகுறித்து சுகாதாரத்துறை அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளது. பணி நீக்கம் செய்யப்பட்டவர்களில் 8 இணைப் பேராசிரியர்கள், 41 உதவி பேராசிரியர்கள், 2 தொழில் பயிற்சி பயிற்றுனர்கள் அடங்குவர்.





இதுகுறித்து சுகாதாரத்துறை மந்திரி சத்யகுமார்யாதவ் அளித்த பேட்டியில், "விளக்கக் கடிதங்கள் வழங்கப்பட்டு பதில் அளிக்க போதிய நேரம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், சம்பந்தப்பட்ட டாக்டர்கள் இடமிருந்து எந்த பதிலும் வராததால் பணி நீக்கம் நடவடிக்கை எடுக்கப்பட்டது" என அவர் கூறினார்.

பணி நீக்கம் செய்யப்பட்ட 8 இணைப் பேராசிரியர்களில் ஒருவரான ஆந்திரா மருத்துவ கல்லூரி டாக்டர், கடந்த 2020–ம் ஆண்டு பிப்ரவரி 7–ம் தேதி முதல் பணிக்கு வரவில்லை என்றும், மற்றொருவரான உதவி பேராசிரியர் 2022 ஆகஸ்டு 22–ம் தேதி முதல் பணிக்கு வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணி நீக்கம் செய்யப்பட்ட பெரும்பாலான டாக்டர்கள் கடப்பா, அனந்தபூர், ஒங்கோல், திருப்பதி, விஜயவாடா, காக்கிநாடா, விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்தவர்கள் என செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஒரு ஆண்டுக்கு குறைவாக பணிக்கு வராமல் இருந்த 11 டாக்டர்கள் மீது குற்றப்பத்திரிகைகள் வழங்கப்பட்டதையடுத்து அவர்கள் மீண்டும் பணியில் சேர்ந்துள்ளனர்.

மேலும் 33 டாக்டர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் பணிவிடுப்பு ஒரு ஆண்டை கடந்தால், அவர்களுக்கும் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கேரள பயணத்தை ரத்து செய்தார் கவர்னர் அர்லேகர்!



சென்னை, மே. 07–

பொறுப்பு கவர்னர் அர்லேகர் தனது கேரள பயணத்தை ரத்து செய்துள்ளதாக தகவல் வெளியாகி வருகிறது. தமிழகத்தில் பரபரப்பான அரசியல் சூழல் நிலவி வரும் நிலையில், கவர்னரின் கேரள பயணம் திடீரென ரத்தாகியுள்ளது தற்போது கவனம் பெற்று வருகிறது

# முதல்-அமைச்சராக விஜய் பொறுப்பேற்க முடியுமா? - அரசியல் திருப்பங்களால் நிலவும் பரபரப்பு!

சென்னை, மே. 07–

தமிழக அரசியல் வரலாற்றில் 2026 சட்டமன்ற தேர்தல் ஒரு முக்கிய திருப்பமாக அமைந்துள்ளது. புதிய வரவான த.வெ.க. 108 இடங்களை கைப்பற்றி தனிப்பெரும் கட்சியாக உள்ளது. இதனையடுத்து தமிழக கவர்னர் அர்லேகரை சந்தித்து. விஜய் நேற்று மாலை ஆட்சி அமைக்க உரிமை கோரினார்.



அப்போது அவர், த.வெ.க.வின் 108 எம்.எல்.ஏ.க்கள் மற்றும் காங்கிரசைச் சேர்ந்த 5 எம்.எல்.ஏ.க்கள் என மொத்தம் 113 எம்.எல்.ஏ.க்களின் பட்டியலை வழங்கினார். ஆனால் அதை பெற்றுக்கொண்ட கவர்னர், 118 எம்.எல்.ஏ.க்கள் பெயர் பட்டியலை கொண்டு வந்தால்தான் ஆட்சி அமைக்க அனுமதிக்க முடியும் என்று திட்டவட்டமாக கூறிவிட்டார். இதனால் புதிய அரசு அமைவதில் இழுபறி நீடித்து வருகிறது.

இதற்கிடையே, விஜய்யால் ஆட்சி அமைக்க முடியாததால், தி.மு.க. ஆதரவுடன் அ.தி.மு.க. ஆட்சி அமைக்க உள்ளதாக ஒரு தகவல் நேற்று இரவு காட்டுத்தீ போல் பரவியது. இதற்கு ஏற்றார்போல் இரு கட்சிகளும் தனித்தனியாக நேற்று பல மணி நேரம் ஆலோசனை நடத்தின. இந்த தகவலுக்கு 2 கட்சிகளும் மறுப்பு தெரிவிக்காததால், இந்த தகவல் உண்மை என்றே அரசியல் வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

தமிழக அரசியல் களம் கடந்த 2 நாட்களாக ஒவ்வொரு நிமிடமும் பரபரப்பாகவே இருந்து வருகிறது.

அதன் விவரம் வருமாறு:–

* த.வெ.க.விற்கு, காங்கிரஸ் நிபந்தனையற்ற ஆதரவு தரும் என்று எதிர்பாக்கப்பட்ட நிலையில் ஆட்சியில் பங்கு என்பதோடு மட்டுமல்லாமல் இனி நடைபெற உள்ள உள்ளாட்சி, நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களவை தேர்தல்களிலும் காங்கிரசுடன் த.வெ.க. கூட்டணி அமைக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு காங்கிரஸ் ஆதரவு தந்தது.

* பா.ம.க. த.வெ.கவோடு சேர்ந்துவிடும். அந்த அமைச்சரவையில் சவுமியா அன்புமணி சேர்ந்து விடுவார் என்றும் கூறப்பட் டது. ஆனால் நேற்று திடீரென்று அன்புமணி ராமதாஸ் எந்த கருத்தையும் இது தொடர்பாக சொல்ல மறுத்து விட்டார். அதாவது பா.ம.க. த.வெ.க.வுடன் சேர கூடாது. அதற்கு ஈடாக அன்புமணி ராமதாசுக்கு மத்திய மந்திரி பதவி வழங்கப்படும் என்ற பேரம் பேசப்பட்டதால் பா.ம.க. இப்போது த.வெ.க.விற்கு ஆதரவு அளிக்கும் நிலைப்பாட்டில் இருந்து பின்வாங்கி இருப்பதாக அரசியல் வட்டாரத்தில் பரப்பரப்பான தகவல் கிளம்பியது.

* த.வெ.க.விற்கு அதரவு கொடுப்பது குறித்து விடுதலை சிறுத்தை கட்சி நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் இன்று நடத்தப்பட்டு அதில் முடிவு எடுக்கப்படும் என்று நேற்று காலை திருமாவளவன் கூறியிருந்த நிலையில், இந்த கூட்டம் ரத்து செய்யப்படுவதாக மாலையில் அறிவிப்பு வெளியாது. ஆனால் ஏன் ரத்து என்பதற்கான காரணம் தெரிவிக்கப்பட வில்லை. அதன் மூலம் த.வெ.க.விற்கு வி.சி.க.ஆதரவு தராது என்றே கூறப்படுகிறது.

* ஆரம்பத்தில் கம்யூனிஸ்டு கட்சிகள் த.வெ.க. பக்கம் செல்வதாக கூறப்பட்ட நிலையில் அவர்களும் தி.மு.க.வை விட்டு செல்ல வேண்டாம். தி.மு.க. கூட்டணியில் தொடர வேண்டும் என்ற முடிவை எடுத்து இருப்பதாக தெரிகிறது.

* விஜய் 7–ந் தேதி (அதாவது இன்று) முதல்–அமைச்சராக பொறுப்பேற்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். எனவே அதற்கான ஏற்பாடுகளை த.வெ.க.வினர் செய்ய தொடங்கினர். ஆனால் அதற்கு முன்பு எப்போதும் வழக்கத்தில் இல்லாத ஒன்றாக, கவர்னர் தொலைபேசியில் பத்திரிகை ஒன்றுக்கு நேற்று முன்தினம் மாலை திடீரென பேட்டி அளித்தார்.

அதில் த.வெ.க.விற்கு எவ்வளவு எம்.எல்.ஏ.கள் ஆதரவு இருக்கிறது என்ற தகவல் எனக்கு இன்னும் வரவில்லை. அது வந்த பிறகு நான் முடிவெடுப்பேன் என்று தெளிவான ஒரு செய்தியை அழுத்தமாக சொன்னார். அதாவது முதல்–அமைச்சராக விஜய் பொறுப்பேற்க வேண்டுமென்றால், நான் (கவர்னர்) முடிவு செய்ய வேண்டும். த.வெ.க.வினர் அல்ல. என்பதனை கவர்னர் தெளிவுப்படுத்தவே பேட்டி அளித்து இருக்கிறார். அதன் வெளிப்படாக தான் அவர், விஜய்யை ஆட்சி அமைக்க அனுமதிக்கவில்லை என்று கூறுகின்றனர்.

* த.வெ.க.விற்கு ஆதரவு தரும் என்று நம்பப்பட்ட வி.சி.க.. கம்யூனிஸ்டு கட்சிகள், பா.ம.க. ஆகியவை நேற்று பின் வாங்கி இருக்கின்றன. அ.தி.மு.க. ஆதரவு தரமாட்டோம் என்று திட்டவிட்டமாக கூறிவிட்டது. எனவே விஜய்யால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது, எனவே கவர்னரும் அவரை ஆட்சி அமைக்க அழைக்கமாட்டார் என்று அரசியல் வட்டாரத்தில் கூறுகின்றனர். எனவே தமிழகத்தில் இனி அடுத்து என்ன நடக்கப்போகும் என்ற பரபரப்பு ஏற்பட்டு இருக்கிறது.

இந்த பரபரப்பான சூழலில், தவெக தலைவர் விஜய் இன்று மீண்டும் கவர்னரை சந்திக்க உள்ளார். காலை 11 மணிக்கு கவர்னர் அர்லேகரை சந்திக்க விஜய் நேரம் கேட்டுள்ளார். இந்த சந்திப்பின்போது தங்களை ஆட்சியமைக்க அழைக்க வேண்டும் என கவர்னரிடம் விஜய் மீண்டும் வலியுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக அவர் பனையூரில் இருந்து கிண்டியில் உள்ள கவர்னர் மாளிகைக்கு புறப்பட்டுள்ளார்.

# செந்தில் பாலாஜிக்கு எதிரான சிபிஐ விசாரணையை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு!

புதுடெல்லி, மே. 07–

தமிழ்நாட்டில் 2021 முதல் 2023–ம் ஆண்டு வரை 45 ஆயிரம் டிரான்ஸ்பார்மர்கள் கொள்முதல் செய்யப்பட்டதில் சுமார் ரூ.397 கோடி அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.



இந்த முறை கேட்டில் அப்போதைய அமைச்சர் செந்தில்பாலாஜி, டான்ஜெட்கோ தலைவரும், நிர்வாக இயக்குநருமான ராஜேஷ் லக் கானி, டான்ஜெட்கோ கொள்முதல் பிரிவு நிதி கட்டுப்பாட்டாளர் வி.காசி உள்ளிட்டோருக்கு தொடர்புள்ளது என்று சென்னை ஐகோர்ட்டில் அறப்போர் இயக்கம் பொதுநல வழக்கு தாக்கல் செய்தது.

மேலும் இந்த முறைகேடு குறித்து சி.பி.ஐ. விசாரணைக்கு உத் தரவிட வேண்டும் என்று அ.தி.மு.க. சார்பிலும் பொதுநல வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்குகளை தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி, நீதி பதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்த நிலையில், கடந்த 30–ந் தேதி கூறிய தீர்ப்பில், புகார் குறித்து விசாரிக்க சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. இந்த நிலையில், டான்ஜெட்கோ தலைவரும், நிர்வாக இயக்குநருமான ராஜேஷ் லக்கானி, டான்ஜெட்கோ கொள்முதல் பிரிவு நிதி கட் டுப்பாட்டாளர் வி.காசி ஆகியோர் சார்பில் ஐகோர்ட்டின் சி.பி.ஐ. விசாரணைக்கு இடைக்கால தடை விதிக்க கோரி சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# விஜய்க்கு ஆதரவாக போராட்டம்: சென்னை மெரினாவில் போலீஸ் குவிப்பு!



சென்னை, மே. 07–

த.வெ.க. தலைவர் விஜய் முதல் – அமைச்சராக பதவியேற்பது தள்ளிப்போவது அவரது தொண்டர்களுக்கு பேரதிர்ச்சியாக உள்ளது. விஜய்க்கு ஆதரவாக மெரினாவில் போராட்டம் நடத்தப்போவதாக சமூக வலைதளங்களில் கருத்துகள் பரவி வருவதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை மெரினாவில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. ஜல்லிக்கட்டு போராட்டம் போல போராட்டம் நடத்தப்படும் என தவெகவினர் சமூக வலைதளங்களில் பதிவு செய்து வருகின்றனர்.

# தவெக எம்.எல்.ஏ.க்கள் பனையூர் அலுவலகம் வர அழைப்பு!




சென்னை, மே. 07–

தவெக எம்.எல்.ஏ.க்கள் பனையூர் அலுவலகம் வருமாறு அக்கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த் அழைப்பு விடுத்துள்ளார். கவர்னரை சந்தித்து நேற்று விஜய் ஆட்சியமைக்க உரிமை கோரிய நிலையில், இன்னும் பெரும்பான்மை கிடைக்காததால் அடுத்தக்கட்ட நகர்வுகள் குறித்து ஆலோசிக்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

# விஜய் வீட்டின் முன்பு போடப்பட்டிருந்த பாதுகாப்புகள் முழுமையாக அகற்றம்!

சென்னை, மே. 07–

விஜய் வீட்டின் முன்பு போடப்பட்டிருந்த பாதுகாப்புகள் முழுமையாக அகற்றப்பட்டது. மேலும் விஜய் வீட்டில் வைக்கப்பட்டிருந்த மெட்டல் டிடெக்டர் வாயிலும் திரும்ப எடுத்துச்செல்லப்பட்டது. முன்னதாக சென்னை நீலாங்கரையில் உள்ள விஜய் வீட்டின் முன்பு நேற்றுவரை நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.



விஜய்க்கான அனைத்து பாதுகாப்புகளும் திரும்பப் பெறப்பட்டுள்ளதால், விஜய்யின் நீலாங்கரை இல்லத்தில் திடீர் அமைதி காணப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020